பக்கங்கள்:-22

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 12 | சனிக்கிழமை | 25.05.2024 | அதிர்வு 298

யாழிலிருந்து தீவுகளுக்கான

## படகுச் சேவைகள் இன்றும் நிறுத்தம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கடல் கடந்து பயணிக்கும் தீவுப் பகுதிகளுக்கான படகுச் சேவைகள் இன்றும் இடம்பெறமாட்டாது என யாழ். மாவட்ட அனர்த்த 06



# வடக்கு, கிழக்குப் பிரச்சினைகளுக்கு விரைவில் உரிய தீர்வு காணப்படும்!

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி ரணில் உறுதி





(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

"போர் காரணமாக வடக்கு, கிழக்கில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்படும். அந்தப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் காணப்படும். அபிவிருத்திகளின் நன்மைகள் வடக்கு - கிழக்கு மக்களுக்கும் வழங்கப்படும்."

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார். 07

# 2005 ஆம் ஆண்டில் ரணிலின் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம்

## அதை அவர்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என்கின்றார் சுமந்திரன்



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

"யாழ்ப்பாணம் மாவட்டத்தின் அபிவிருத்தியிலும், மக்களின் அபிவிருத்தியிலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார். 2005 இல் உங்கள் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அதை வட பகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என நினைக்கின்றேன்."

– இவ்வாறு இலங்கைத் 06



இன்று நான் என் பத்தியில் கூறப்போவது என் கதை அல்ல. என் செய்தியாளரின் நேற்றைய அனுபவம்.

'பிச்சை புகினும் கற்கை நன்றே' என்ற ஔவைப் பாட்டியின் கூற்றை இன்று (நேற்று) நேரில் கண்டேன் என்ற பீடிகையோடு தமது அனுபவத்தை நேற்றுப் பகல் என்னுடன் பரிமாறினார் நமது அலுவலக ஆஸ்தான செய்தியாளர்.

அது மனதைத் தொட்டது. அதற்குள் ஆழமான விடயம் இருப்பதாகவும் எனக்குப் பட்டது.

அதனால் அதை எழுத்தில் 06

# பொருளாதாரப் போரை வெல்லக்கூடியவரே மொட்டுவின் வேட்பாளராகக் களமிறங்குவார்

## அக்கட்சியின் பொதுச்செயலாளர் கூறுகின்றார்

போரை மஹிந்த ராஜபக்ஷ முடிவுக்குக் கொண்டு வந்தது போல் பொருளாதாரப் போரை வெற்றிகொள்ளக்கூடிய ஒருவரையே ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறக்குவோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி இதுவரை எந்தவொரு தேர்தலிலும் தோற்றது கிடையாது. ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கக் கட்சி சார்பில் சில வேட்பாளர்கள் தயார் நிலையிலேயே உள்ளனர். உரிய நேரம் வரும்போது வெற்றி வேட்பாளரைக் களமிறக்கி ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி நடைபோடுவோம்.

ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் கருத்துக் கூறுவதில் இருந்து விலகி இருக்குமாறு கட்சி தீர்மானித்துள்ளது. எனவே, தற்போதைய சூழ்நிலையில் வேட்பாளர் பெயரை, கட்சி முடிவை மீறி அறிவிக்க முடியாது.

மஹிந்த ராஜபக்ஷ பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியவர். தலா தேசிய உற்பத்தியையும் அதிகரிக்கச் செய்தார். அப்போது தம்மிக்க பெரேரா மஹிந்த ராஜபக்ஷவின்



செயலாளராகவும், முதலீட்டுச் சபையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

நாட்டை மீட்கக்கூடிய தலைவராகவே மஹிந்த ராஜபக்ஷவை அன்று மக்கள் தெரிவு செய்தனர். அவர் மக்கள் எதிர்பார்ப்பை நிறைவேற்றினார். போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். அதேபோல் பொருளாதாரப் போரை வெற்றி கொண்டு, நாட்டை மீட்கக்கூடிய வேட்பாளர் ஒருவரை நாம் நிறுத்துவோம்.” – என்றார்.

# வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்காக பல பணிகளைச் செய்த ஜனாதிபதி

## ரணிலை நேரில் பாராட்டிய சித்தார்த்தன்




(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார்.”

– இவ்வாறு புளொட் கட்சியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சித்தார்த்தன் எம்.பி. கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வருடங்கள் என்ற குறுகிய காலப் பகுதிக்குள் வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்கு வழங்கப்படும் இந்தக் கட்டடமானது வடக்குக்கு வழங்கப்படும் அபிவிருத்தியின் மற்றுமொரு உதாரணமாகவே நான் காண்கின்றேன்.

குறிப்பாக காணி வழங்கல் விவகாரம் தொடர்பில் வடக்கு மக்களின் சார்பாக அவர் தீர்மானங்களை எடுத்தார். அத்துடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திக்காகப் பல பணிகளைச் செய்துள்ளார்.” – என்றார்.

# கார் மீது மரம் முறிந்து வீழ்ந்து மூவர் காயம்!

சிலாபத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கார் ஒன்று நேற்றுப் பிற்பகல் மஹவெவ, கொஸ்வாடிய பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோது அதன் மீது மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் மூவர் காயமடைந்துள்ளனர்.

அந்தக் காரில் இருந்த மூவரும் காயங்களுடன் மாரவில ஆரம்ப வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று புத்தளம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் அனர்த்த நிவாரண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் ஏழு வயது மகள் ஆகியோர் காயமடைந்துள்ளனர்.

அந்தப் பகுதியில் வசிப்பவர்களின் கடும் முயற்சியால் காரில் சிக்கிய அனைவரும் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.












# யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கான புதிய எட்டு மாடி கட்டடத் தொகுதி திறப்பு விழா

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.














# வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு காணிப் பிரச்சினையால் கடும் பாதிப்பு

## யாழ். மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் ஒப்புக்கொண்டார் ரணில்

(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

"காணிப் பிரச்சினை வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது. அரச காணிகளில் குடியேற்றப்பட்ட மக்களைத் தவிர யுத்தத்தினால் காணிகளை இழந்தவர்கள் ஏராளம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"உறுமய" வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட மக்களுக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய 1286 இலவசப் பத்திரங்கள் மக்களிடம் வழங்கி வைக்கப்பட்டன. காணி உறுதிப் பத்திரங்களை ஜனாதிபதி அடையாளமாக சிலருக்கு வழங்கி வைத்தார்.

"உறுமய" வேலைத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு 13 ஆயிரத்து 858 இலவச காணி உறுதிப் பத்திரங்கள் எதிர்காலத்தில் வழங்கப்பட உள்ளன.

இந்த நிகழ்வில்,.ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

"கடந்த பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட வடமாகாண வீட்டுத்திட்டம் அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும். இந்த இலவச காணி உரிமைத் திட்டம் அதன் ஒரு படியாகும். உறுமய வேலைத்திட்டம் நாட்டிலேயே மிகப்பெரிய தனியார்மயமாக்கல் வேலைத்திட்டம். நாட்டு மக்களுக்கு இலவச காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இந்த வேலைத் திட்டத்தை நாடளாவிய ரீதியில் அனைத்து பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கமாகும். அனைத்து மக்களுக்கும் அவர்கள் வாழும் மண்ணில் முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கப்பட வேண்டும்.

இந்த பத்திரங்கள் இன்று வழங்கப்பட்டதுபோன்று, இந்தப் பணி எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படும். காணி ஆணையாளர் திணைக்களத்தில் பணியாளர்கள் பற்றாக் குறையால், பணிகள் சற்று தாமதமாகி வருகின்றன.

அதுபற்றி கலந்துரையாடிய பிறகு, காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு 100 புதிய பணியாளர்களையும், நில அளவைத் திணைக்களத்திற்கு 150 பேரையும் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளன. இதன்படி எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை மிகவும் திறமையான முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

காணிப் பிரச்சினை வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது. அரச காணிகளில் குடியேற்றப்பட்ட மக்களைத் தவிர யுத்தத்தால் காணிகளை இழந்தவர்கள் ஏராளம். தீர்க்கப்பட வேண்டிய இரண்டு பிரச்சினைகள் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது என்னுடன் இது குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

அதற்கமைவாக, பாதுகாப்புத் தரப்பினருடன் 05











# வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு காணிப் பிரச்சினையால் கடும் பாதிப்பு

## யாழ். மாவட்ட மக்களுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் ஒப்புக்கொண்டார் ரணில்

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கலந்துரையாடி, பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள காணிகளில், காணி விடுவிக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்களில் அந்த அனைத்து காணிகளும் மக்களிடம் மீள ஒப்படைக் கப்பட்டுள்ளது.

மேலும், வனவளப் பாதுகாப்புத்துறை கையேற்ற காணிகள் குறித்தும் பிரச்சினை உள்ளது. இந்தப் பிரச்சினை வடக்கு கிழக்கில் மட்டுமல்ல. தென் மாகாணத்திலும் இந்தப் பிரச்சினை உள்ளது. எனவே, 1985 வரைபடத்தின்படி, காடுகளாக உள்ள பகுதிகளை, காடுகளாக பேணவும்,

மீதமுள்ள காணிகளை காடு அல்லாத பகுதிகளாக கருத வும் கொள்கை ரீதியான முடிவு எடுத்துள்ளோம். தற்போது அது தொடர்பில் ஆலோசித்து வருவதோடு குறிப்பிட்ட காணி களை வழங்குமாறும் தெரிவித்துள்ளோம். தொல்பொருளி யல் திணைக்களத்தின் கீழும் அதிக அளவிலான காணிகள் உள்ளன. தொல்பொருளியல் நடவடிக்கைகளுக்கு தேவை யான காணிகளை தவிர்த்து ஏனைய காணிகளை மீள ஒப் படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் இந்தக் காணிகள் அனைத்தையும் விடுவிப்பதற்கான நடவடிக் கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன், யாழ்ப்பாணத்தின் உயர்பாதுகாப்பு வலயம் பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளது. விசேட ஆய்வுகளின் பின்னர் மேலும் விடுவிக்கப்படக்கூடிய காணிகளை விடுவிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மத வழிபாட் டுத் தலங்களுக்குச் சொந்தமான காணியின் ஒரு பகுதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நாட்டின் அனைத்து மக்களினதும் காணி உரிமையை உறுதிப்படுத்தி முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்பை உருவாக்க எதிர் பார்க்கின்றேன்.

அத்துடன், கடந்த இரண்டு வருடங்களாக ஏற்பட்ட பொரு ளாதார நெருக்கடி காரணமாக இம்மாகாண மக்களுக்கு தேவையான வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை ஒதுக்க முடியவில்லை.ஆனால் அடுத்த ஆண்டு முதல் மீண் டும் அது ஆரம்பிக்கப்படும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

இந்த இலவச பத்திரங்களை வழங்குவதும் அந்த திட்டத் தின் ஒரு பகுதி என்றுதான் கூற வேண்டும். இலவசப் பத்தி ரங்களை வழங்குவதை இந்நாட்டின் மிகப்பெரிய தனியார் மயமாக்கும் திட்டம் என்று கூறலாம்.

ஜப்பான், கொரியாவைத் தவிர வேறு எந்த நாடும் அந்த வகையில் மக்களுக்கு காணி உரிமை வழங்கவில்லை. ஆனால், ஜப்பானும் கொரியாவும் மக்களுக்கு இலவசமாக காணி உரிமையை வழங்கவில்லை. குறைந்த விலையில் வாங்குவதற்கான வாய்ப்பை மட்டுமே தருகிறது. ஆனால் எமது நாட்டில் மக்களுக்கு இலவச காணி உரிமையை வழங்குவதற்காக செயற்பட்டு வருகின்றோம்.

பருத்தித்துறையிலிருந்து தேவேந்திர முனை வரையிலும் மட்டக்களப்பில் இருந்து நீர்கொழும்பு வரையிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். இலங்கை மக்கள் தங்கள் இனம் அல்லது மதம் எதுவாக இருந்தாலும் பாரம்பரியமாக காணி உரிமையை மதிக்கின்றனர். இன்று நீங்கள் அதை சரியாகப் புரிந்துகொள்கிறீர்கள். அந்த நிலத்தைப் பாதுகாத்து உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பது உங்கள் பொறுப்பு என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்."– என்றார்.











## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வரைந்து தரக் கேட்டுக் கொண்டேன். அவரின் எழுத்தோட்டத்திலேயே அதனை இங்கு தருகிறேன்.

'தமக்காக அன்றி பிள்ளைகளின் கல்விக்காக பிச்சை எடுக்கும் தாய்மார்' என்ற தலைப்பில் அந்த எழுத்தோவியம் என் பார்வைக்கு வந்தது.

இனி, என் செய்தியாளரின் கூற்றில் அந்த விவரங்களைப் பாருங்கள்:-

பெற்ற பிள்ளைகளின் கல்விக்காக இன்று மாவட்டம் விட்டு மாவட்டம் அலைந்து பிச்சை எடுத்து கற்பிக்கும் நிலையிலேயே நாம் வாழ்கின்றோம் என வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் வசிக்கும் தெலுங்கு இனத் தாய்மார் இருவர் தெரிவிக்கின்றனர்.

ஈரற்பெரியகுளத்தில் இருந்து காலை 6 மணி பஸ்ஸில் ஏறி 9 மணிக்கு யாழ்ப்பாண நகரத்தில் இறங்கி, யாழ் நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் தர்மம் (பிச்சை) எடுத்துச் செல்லும் தாய்மாரின் கண்ணீர்க் கதை இது.

வெள்ளிக் கிழமை நேரம். யாழ். நகரில் உள்ள ஒரு சிற்றுண்டிச்சாலையில் அமர்ந்து தேநீர் அருந்திக்கொண்டிருந்தேன். அப்போது அங்கே தாய்மார் உட்பட பலர் வந்து தர்மம் எனக் கை நீட்டியபோது கடை உரிமையாளரும் அனைவருக்கும் தன்னாலான படியை அளந்து கொண்டிருந்தார்.

தர்மம் கேட்டு வந்த இரு தாய்மார் கடைக்காரரிடம் தேநீர் கேட்டனர். அதன் விலையையும் கேட்டனர். சீனி போடாமல் தந்தால் என்ன விலை என அவர்கள் கேட்டபோது அதற்கான பெறுமதியை கழித்து உரிமையாளர் கூறினார். இருவரும் சீனியைத் தவிர்த்து தேநீர் கேட்டவாறு இருக்கையில் அமர்ந்தனர். (சீனியைத் தவிர்த்தமை நோயின் காரணமாகவா அல்லது நிதி நெருக்கடியா என்ற சந்தேகமும் எனக்கு எழுந்தது)

அடுத்த மேசையில் இருந்தவாறு அவர்களிடம் பேச்சுக் கொடுத்தேன்.

அவர்கள் தாங்கள் வவுனியா ஈரற்பெரியகுளத்தில் இருந்து வருகின்றனர் எனவும், ஒருவருக்கு 4 பிள்ளைகளும், மற்றவர் 3 பிள்ளைகளும் இருக்கின்றனர் எனவும், இருவரின் கணவர்மாரும் வவுனியாகுளத்தில்மீன்பிடியில்ஈடுபடுகின்றனர் எனவும் தெரிவித்தனர்.

கணவரின் வருமானத்தில் குடும்ப சீவியத்தை நடாத்த முடியாதா, பிச்சை எடுக்க வேண்டுமா என்று வினவினேன்.

"ஒரு நாளைக்கு 2 ஆயிரம் ரூபா வரும். அது ஒரு நேர உணவிற்கே போதாத நிலையில் பிள்ளைகளின் கல்விக்கு என்ன செய்வது? மின்சாரம், சுகாதாரம் உள்ளிட்ட ஏனையவற்றுக்கு எங்கு போவது?" - என்று பதில் வினாத் தொடுத்தனர் அவர்கள்.

அவர்களிடம் பிள்ளைகளுக்கு எத்தனை வயது, எங்கே கல்வி கற்கின்றனர் எனத் திரும்பி நான் கேட்டதற்கு அதில் ஓர் பெண்மணி அளித்த பதில் என்னைத் தூக்கி வாரிப்போட்டது.

"மூத்த பிள்ளைக்கு தற்போது 20 வயது. கடைசிக்கு 11 வயது. அனைவரும் வவுனியா காமினி மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கின்றனர். மூத்த பெண் பிள்ளை உயர்தரம் கற்பதனால் தனியார் கல்விக்குச் சென்று வருவார். அதற்கே அதிக பணம் தேவை" எனப் பதில் வந்தது.

ஆர்வ மிகுதியில் எங்கே தனியார் கல்விக்குச் செல்கின்றனர், அதற்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று நோண்டினேன் நான்.

பிள்ளைகள் தனியார் கல்விக்காக கொழும்பு றோயல் கல்லூரியில் கற்பிக்கும் இரு பிரபல ஆசிரியர்களிடம் செல்கின்றனர். வெள்ளக்கிழமை மாலை கொழும்பு சென்று திங்கள் காலை பாடசாலைக்குத் திரும்பி விடுவார்கள். கொழும்பு சென்று வர, தங்குமிடம், உணவு, ஆசிரியர் கட்டணம் அனைத்திற்கும் ஒரு தடவைக்கு 15 ஆயிரம் ரூபா வேண்டும். இதில் ஆசிரியருக்கு மட்டும் ஒரு மணி நேரத்திற்கு 1,500 ரூபா. சனி, ஞாயிறு இரு நாள்களிலும் இரு தடவையென 4 வகுப்புக்கள் இடம்பெறும் என்ற தெளிவான பதில் வந்தபோது ஒரு கணம் எனது நெஞ்சே பதறியது. (ஏனெனில் நானும் 3 பிள்ளையின் தந்தை).

இவற்றைக் கூறியவாறு இரு தாய்மாரும் தேநீர் அருந்தினர். மிகுதி விடயத்தையும் அறியும் ஆவலில் வேகமாக கேள்விகளைத் தொடுத்தேன்.

அவ்வாறானால்வெள்ளிக்கிழமையாழ் வந்துபோனால் உங்களின் அனைத்து செலவிற்கும் போதுமான வருமானம் கிட்டுமா என்று கேள்வி எழுப்பினேன்.

"இல்லை... வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணம் வருவோம். வியாழக்கிழமை மன்னார் செல்வோம். புதன்கிழமை கிளிநொச்சி வருவோம். இடைநாளில் வசதிப்பட்டால் அநுராதபுரம் செல்வோம். அவ்வாறு சென்று சேமித்தாலே அந்த வாரம் பிள்ளைகளின் கற்றல் செலவீனத்திற்குப் போதுமானதாக இருக்கும். இவ்வளவு கஷ்டப்பட்டு பிச்சை எடுத்தும், அந்தப் பணத்தை கல்விக்காக வழங்கிவிட்டு மீண்டும் நாங்கள் பட்டினிதான் கிடக்க வேண்டும். ஏனெனில் எங்களுக்குச் சாப்பாட்டுக்குப் பணம் இருக்காது. என்ன செய்வது?"- என மனம் வெதும்பினர்.

"இந்தனை மாவட்டம் செல்லும் நீங்கள், உங்கள் மாவட்டமான வவுனியா நகரில் உள்ள கடைகளுக்குச் செல்ல மாட்டீர்களா?" என்ற கேட்டேன்.

"நாம் வவுனியா நகரின் கடைகளிற்குச் சென்றுவரும்போது படிக்கச் செல்லும் எமது பிள்ளைகள் எவராவது கண்டால் மனமுடைந்து கற்றலில் நாட்டம்கொள்ளாது விட்டுவிடுவார்களே...!" எனப் பதிலளித்தவர்களிடம் கேள்விக் கணையைத் தொடர்ந்தேன்.

"ஏன் உங்களிற்கு அரச வீட்டுத் திட்டம், சமுர்த்தி போன்ற கொடுப்பனவுகள் கிடைக்கும்தானே...?" - என்றேன்.

"நல்லவேளை ஈரற்பெரியகுளத்தில் இருக்கும் எம்மவர்களிற்கு இந்திய அரசின் 100 வீடுகள் கிடைத்தன. அதேநேம் அப்போது சமுர்த்தியும் கிடைத்து வந்தது. ஆனால் தற்போது சமுர்த்தியை நிறுத்தி விட்டனர்." - எனப் பதிலளித்தவர்களிடம் யாழிற்கு வந்துபோனால் ஒரு நாளைக்கு எவ்வளவு பணம் கிடைக்கும் என்று கேட்டேன்.

"பஸ் காசு, உணவு, தேநீர் போனால் ஒரு மூவாயிரம் ரூபா முதல் 4 ஆயிரம் வரையில் கிடைக்கும்" என்று கூறியவாறு அவசர அவசரமாக தேநீரைக் குடித்து நிறைவு செய்து அதற்கான பணத்தை செலுத்த சென்றவர்களிடம் அதற்கான பணத்தை நான் செலுத்துகின்றேன் சென்றுவாருங்கள் என்றேன். அதற்கும் ஒரு கும்பிடு போட்டு அங்கிருந்து அடுத்த கடைக்கு நகர்ந்தனர் அவர்கள் இருவரும்.

## படகுச் சேவைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முகாமைத்துவப் பிரிவு அறிவித்துள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் காலநிலை அறிக்கையின் பிரகாரம் நேற்று 24 ஆம் திகதி கடல் அதிக கொந்தளிப்பாகக் காணப்பட்டதன் காரணமாக பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி தீவுப் பகுதிகளுக்கான படகுச் சேவைகள் இரத்துச் செய்யப்பட்டன.

இதன் பிரகாரம் நெடுந்தீவு, எழுவை தீவு மற்றும் அனலைதீவுக்கான படகுச் சேவைகளே நேற்று முதல் நிறுத்தப்பட்டன. இந்நிலையில், அதிக காற்றுடன் கூடிய காலநிலை தொடர்வதன் காரணமாக இன்றும் மேற்படி 3 தீவுகளுக்குமான படகுச் சேவைகள் இடம்பெறமாட்டாது எனவும், நயினாதீவுக்கான படகுச் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெறும் எனவும் யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2005ஆம் ஆண்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் சுமந்திரன் எம்.பி. கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"யாழ்ப்பாணம் மக்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்தச் சபையில் உரையாற்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் இன்று இங்கு வந்தமைக்குத் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதிக்கு நன்றி கூறுகின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலம் முதல் வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். இன்று திறந்து வைக்கப்படும் யாழ். பல்கலைக்கழகத்தின் இந்த மருத்துவ பீடக் கட்டடம் வடக்குக்கு மாத்திரமன்றி நாட்டுக்கும் ஒரு நல்ல முதலீடாகும் எனச் சுட்டிக்காட்டலாம்.

மேலும் இது எதிர்காலத்தில் இலங்கையில் நிபுணர்களின் புகலிடமாக மாறும் என நான் நம்புகின்றேன். முன்னதாக இந்தச் சபையில் உரையாற்றியவர்கள் கூறியது போல் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியிலும், மக்களின் அபிவிருத்தியிலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

2005 இல் உங்கள் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அதை வட பகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என நினைக்கின்றேன். இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை நான் வாழ்த்துகின்றேன்.

இந்த முதலீடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை அன்புடன் வரவேற்பதுடன், இந்த விஜயத்தின்போது வடக்குக்கு அவர் ஆற்றி வரும் அனைத்துப் பணிகளையும் பாராட்டுகின்றோம்."

- என்றார்.

## வடக்கு, கிழக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில்,

"யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குத் தேசிய வைத்தியசாலையை வழங்குமாறு நீங்கள் அனைவரும் அரசிடம் கோரிக்கை விடுத்தீர்கள். கராப்பிட்டிய வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்துவதற்குக் கடந்த வாரம் அமைச்சரவையில் அனுமதி வழங்கினோம். அத்துடன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை அடுத்த தேசிய வைத்தியசாலையாக மாற்றுவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உயர்தர சுகாதார சேவையை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அப்போது கொழும்பில் மாத்திரமன்றி தெற்கு, வடக்கு, மற்றும் மத்திய மாகாணங்களிலும் சிறந்ததொரு வைத்தியசாலைக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும். அத்தோடு நின்று விடாமல் அபிவிருத்தி செய்ய வேண்டிய ஏனைய பகுதிகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

நான் அடிக்கடி யாழ். மாவட்டத்துக்கு வருகை தருவதாக இங்கு குறிப்பிடப்பட்டது. உண்மையில் நான் இந்த முறை இங்கு வைத்தியசாலைகளை திறப்பதற்காக வந்தேன். நான் ஒரு நீண்ட வார இறுதி விடுமுறையில் வந்துள்ளேன். அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கின்றேன்.

நான் கடந்த முறை இங்கு வருகை தந்தபோது, நெதர்லாந்துத் தூதுவர் இந்த இரண்டு புதிய மருத்துவமனைகளைத் திறப்பதற்கு இங்கு வருமாறு என்னிடம் கேட்டுக் கொண்டார். அதனால் இந்த வார இறுதியில் இங்கு வந்து இந்தச் செயற்பாடுகளை நிறைவு செய்யத் தீர்மானித்தேன்.

யாழ்ப்பாணம் மாவட்டம் நீண்டகாலமாக அபிவிருத்தியின் பலனை அனுபவிக்கவில்லை. வருமானம் போதியளவில் இல்லை. மக்கள் வேலைத் தேடும் நிலை காணப்படுகிறது. யாழ்.மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான அநேகமான சாத்தியங்கள் உள்ளன.

யாழ். மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட சில பிரச்சினைகளை எம்மால் தீர்க்க முடிந்துள்ளது. தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் தொடர்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான பிரச்சினைகளும் உள்ளன.

எங்களால் இன்னும் இதனை முடிவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அதற்கான தீர்வுகள் தற்போதுள்ள அரசியல் பிரச்சினைகளைச் சுற்றியே உள்ளன. நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல், காணாமல்போனோர் விவகாரம், இழப்பீடுகள், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சனைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே நேரம் என்று நான் நம்புகின்றேன்.

அதற்கு அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகின்றேன். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முயற்சித்து வருவதோடு, வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளேன்.

முன்னைய ஆணைக்குழு அறிக்கைகள் அனைத்தையும் ஆராய்ந்து தொகுக்கப்பட்ட நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கை அண்மையில் எமக்கு கிடைத்தது. இந்த அனைத்து ஆணைக்குழு அறிக்கைகளின் தாய் அறிக்கையாகவும், இது தொடர்பான கடைசி ஆணைக்குழு அறிக்கையும் அதுவாகவே இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதற்காக மற்றுமொரு ஆணைக்குழுவின் அவசியம் இல்லை.

காணாமல்போனோர் அலுவலகம் மாற்றங்களுக்கு உள்ளாக வேண்டும் என்ற அவர்களின் பரிந்துரையை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதை அப்படியே செய்ய வேண்டும். காணாமல்போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான முழுப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளிலும் மாற்றங்கள் செய்வதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

பொருளாதார நெருக்கடியால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, எங்களால் அதிகளவு இழப்பீடு தொகையை செலுத்த முடியவில்லை. எனவே, அதற்காக பணம் ஒதுக்க வேண்டும். அத்துடன் எது உண்மை, என்ன நடந்தது, நல்லிணக்கத்துக்காக நாம் என்ன செய்கின்றோம் என்ற கேள்விக்குறி காணப்படுகின்றது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைக் கொண்டு வருவதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது. ஆனால், நீதிமன்ற அதிகாரம் குறித்த பிரச்சினைகள் அதற்குள் காணப்படுகின்றன.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவால் நடைமுறைப்படுத்தப்படும் நீதித்துறை அதிகாரங்கள் எமக்கு இருக்க வேண்டுமா அல்லது அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீதித்துறை அதிகாரங்களைச் செயற்படுத்தும் தனி நீதிமன்றம் வேண்டுமா என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். மேலும் இந்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனவே, இது குறித்து அரசு முடிவெடுக்க வேண்டும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை சட்டமாக்குவதற்கு எமக்கு ஆதரவளித்த மூன்று தூதுவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்குமாறு இரண்டு அமைச்சர்களுக்கும் அறிவித்துள்ளேன்.

இதன் மூலம் பல பிரச்சினைகள் தீரும் என நம்புகின்றேன். எனவே, இது பற்றி கலந்துராயடி, சாத்தியமான தீர்வுகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவோம் என்று அமைச்சர்களிடம் தெரிவித்தேன்.

அத்துடன், வடக்கு மாகாணம் அபிவிருத்திக்காகச் சாத்தியக்கூறுகளை அதிகமாகக் கொண்டிருக்கின்றது. இந்த மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பெருமளவில் உள்ளது. அதனால் யாழ்ப்பாணத்தை இலங்கையின் முக்கிய வலுசக்தி மையமாக கட்டியெழுப்ப முடியும். வடக்கு மாகாணத்தில் இந்த வலுசக்தியை நாம் இதுவரை பயன்படுத்தவில்லை. ஆனாலும், ஜிகாவொட்கள் அளவிலான வலுசக்தி இங்கு உள்ளது.

மேலும், நாட்டில் போட்டி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்க எதிர்பார்க்கின்றோம். வடக்கு மாகாணம் அதற்குள் முக்கியமான இடத்தை பிடிக்கின்றது. இங்குள்ள விவசாயிகளுக்கு அதற்கான திறன் உள்ளது. இதன் மூலம் வடக்கு மாகாண மக்களின் வருமான மட்டத்தை பாரியளவில் மேம்படுத்த முடியும்.

மேலும், கைத்தொழில்களைப் பொறுத்த வரையில் காங்கேசந்துறையில் முதலாவது முதலீட்டு வலயத்தை அமைப்பது குறித்தும், பின்னர் பரந்தன் மற்றும் மாங்குளத்தில் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பது குறித்தும் ஆலோசித்து வருகின்றோம். மேலும் திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்றோம். வடக்கில் சுற்றுலாத்துறைக்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறோம்.

எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள தரைமார்க்க தொடர்பின் மூலம் யாழ்ப்பாணம் உள்ளடங்களாக முழு வடக்கு மாகாணமும் புரட்சிகரமாக மாறும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் வடக்கு மாகாணத்தை இலங்கையின் பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய முடியும்.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் சில நடனக் அம்சங்கள் இங்கு இடம்பெற்றன. அவர்களைப் பாராட்டுகின்றேன். அவர்களில் பெரும்பாலானோர் 21 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று துணைவேந்தர் கூறினார். அதாவது 2002 மற்றும் 2003 இல் பிறந்தவர்கள். அவர்களுக்குச் சிறந்த எதிர்காலம் உருவாக்கப்பட வேண்டும்.

அவர்களைத்தான் Gen Z என்று அழைக்கின்றோம். அவர்கள் தங்கள் எதிர்காலத்திலம் குறித்து அதிக ஆர்வம் காட்டுகின்றார்கள். அவர்களுக்கான எதிர்காலத்தை உருவாக்க வேண்டும். இதன் காரணமாகவே புதிய பொருளாதாரக் கட்டமைப்புக்குள் விரைவான அபிவிருத்தியை நோக்கிச் செல்வதற்கான சட்டங்களைக் கொண்டுவருவதற்கு நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம் என்பதையும் கூற வேண்டும்." – என்றார்.

**VACANCY**
**For Website & YouTube Media**
**Male / Female**

- VJ (Video Jockey)
- Photographer
- Graphic Designer
- Editor
- Typist - English & Tamil

**Qualification -**
Minimum 2 Years Experience
G.C.E. A/L or Relevant Media Qualifications
Fluency in Computer Knowledge

**Send your CV to mail before you contact**
**CONTACT - 0777 739 185**
**Email - lankamedianews@gmail.com**

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வேண்டாம் இந்தப் பழக்கம்!

கையடக்கத் தொலைபேசி - ஸ்மாட் போன் - பாவனையினால் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மூளை வளர்ச்சிக்கும், பார்வைக்கும் பாதிப்பு ஏற்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

12 வயதுக்குட்பட்ட குழந்தைகள் ஒரு நாளைக்கு 02 மணி நேரம் மட்டுமே கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என மருத்துவ ஆலோசகர் வைத்தியர் வருண குணதிலக குறிப்பிட்டுள்ளார்.

12 வயதிற்குட்பட்ட குழந்தைகள் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாவதால், கவனம் செலுத்துவதில் சிக்கல்கள், எரிச்சல், ஆக்ரோஷமான நடத்தை மற்றும் தனிமைப்படுத்தப்படுதல் ஆகியவை ஏற்படுகின்றன. அதே சமயம் சரியான முடிவுகளை எடுக்கும் குழந்தையின் திறனையும் அப்பழக்கம் பாதிக்கின்றது என்று அவர் சுட்டுகின்றார்.

இலங்கையில் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்களில் 60 சதவீதம் பேர் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அடிமையாகி உள்ளனர் என்ற திடுக்கிடும் தகவல் ஒன்று புதிய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

தென் மாகாணத்திலுள்ள நானூறு பாடசாலை மாணவர்களிடம் வைத்தியர்கள் குழுவொன்று ஆய்வை மேற்கொண்டதாக விசேட வைத்திய நிபுணர் அமில சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

இதில் பல சிறுவர்கள் இரவு நேரத்தில் தூக்கமின்றி எப்போதும் கவலையுடன் இருக்கின்றனர் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

தொலைபேசிகளுக்கு அடிமையாகி உள்ள சிறுவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கைகளை சரியான முறையில் முன்னெடுப்பதில்லை என்பதும் ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக நிபுணர் தெரிவித்துள்ளார்.

மேலும், கையடக்க தொலைபேசிளுக்கு அடிமையான சிறுவர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது. அவர்களின் உடல் சரியாக செயல்படாததால் நீரிழிவு நோய் ஏற்படுவதாக தெரிய வந்துள்ளது.

மேலும் இவ்வாறு கையடக்கத் தொலைபேசிளுக்கு அடிமையான சிறுவர்கள் வன்முறையில் ஈடுபடும் வகையில் நடந்து கொள்கின்றனர் என்றும், பெற்றோர்களால் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படுகின்றது என்றும் கூட விவரிக்கப்படுகின்றது.

அவசியமாக இருந்தால் மட்டும் எந்தவொரு சிறுவரையும் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரத்திற்கும் குறைவாகக் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்த அனுமதிக்குமாறு பெற்றோர்களிடம் மருத்துவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பகுதியில் மொபைல் கேம்ஸ் எனப்படும் தொலைபேசி விளையாட்டுக்களுக்கு அடிமையான மாணவன் ஒருவன் மன உளைச்சலுக்கு ஆளாகிய நிலையில் தன் தாயைத் தானே கழுத்தை நெரித்துக் கொன்ற மோசமான சம்பவம் அண்மையில் நடைபெற்றிருக்கின்றது.

இதனால் சிறுவர்களுக்கு ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளை வழங்குவது தொடர்பாக பெற்றோர்கள் அவதானமாகச் செயற்பட வேண்டும் எனப் பொலிஸாரும் அறிவுறுத்தியுள்ளனர்.

அவர்களுக்கு ஸ்மார்ட் கையடக்க தொலைபேசிகளை வழங்குவதால் பல்வேறு வகையான பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனப் பொலிஸாரும் எச்சரிக்கின்றனர்.

கையடக்கத் தொலைபேசியை ஒரு பிள்ளை தொடர்ந்து பார்த்துக்கொண்டு வெளியுலகத் தொடர்பாடல்கள் இல்லாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில் குழந்தையின் கண்களில் பார்வைக் குறைபாடுகள் இலகுவில் ஏற்பட வாய்ப்புண்டாகும் என்றும் சொல்லப்படுகின்றது.

குழந்தைகள் சூழலின் இயற்கை நிறங்களை கண்களை அகலத் திறந்து பார்த்து பரிச்சயம் கொள்ளாமல், ஸ்மார்ட் போன் தரும் காட்சிகளிலேயே மூழ்கிக் கிடந்தால் காலப்போக்கில் அவர்களுக்கு நிறக்குருடு நோய் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் ஏற்படும். அது மாத்திமன்றி, அவர்கள் ஒரே இடத்தில் இருந்து கையடக்கத்தொலைபேசியை பார்த்துக்கொண்டு இருப்பதனால் வெளியில் சென்று ஏனைய பிள்ளைகளுடன் சேர்ந்து வியர்வை சிந்தி விளையாடாமை போன்ற காரணங்களினால் அவர்களின் உடலில் நோயெதிர்ப்பு சக்தியும் குறைவடைகின்றது.

பிள்ளைகள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதற்கும், தவறான வெளிநபர்களுடன் வெளியில் தெரியாத தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வதற்கும், வயதுக்கு மீறிய காட்சிகள் மற்றும் பழக்க வழக்கங்களுடன் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொடுக்கவும் இந்தக் கையடக்க தொலைபேசி பாவனை ஓர் உந்து சக்தியாக செயற்படுகின்றது. அதுவே அவர்களின் எதிர்காலத்தை கேள்விகுறியாக்கிவிடும் என்பதை சற்று சிந்தித்து பெற்றோர்கள் செயற்பட வேண்டும்.

இத்தகைய மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தும் கையடக்கத் தொலைபேசிக்கு நமது பிள்ளைகள் அடிமையாக அனுமதிப்பதா? பெற்றோர் விரைந்து, சிந்தித்து, முடிவெடுத்து, நடவடிக்கை எடுக்க வேண்டிய விடயம் இது!



# மகாராஷ்டிர இரசாயன ஆலை வெடி விபத்தில் 10 பேர் பலி

மகாராஷ்டிர மாநிலம் தானே மாவட்டத்தில் டோம்பிவிலி பகுதியில் இடம்பெற்ற இரசாயன தொழிற்சாலையில் உள்ள கொதிகலன் வெடித்து சிதறி ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், விபத்து இடம்பெற்ற இடத்தில் இருந்து நேற்று மேலும் 3 உடல்கள் கண்டெடுக்கப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர்.

அப்பகுதி தாசில்தார் விபத்து தொடர்பாக பேசுகையில், "விபத்துக்குள்ளான தொழிற்சாலை வளாகத்தில் மேலும் சிலர் உயிரிழந்திருக்கலாம் என நினைக்கிறோம். இதனால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும். காயமடைந்த 64 பேர் ஆறு மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் பெண்களும் அடக்கம். தொழிற்சாலையில் தீ முற்றிலுமாக அணைக்கப்பட்டுள்ள நிலையில், இடிபாடு மற்றும் குப்பைகளை அகற்றும் பணி நடந்து வருகிறது. சேதங்கள் மதிப்பிடப்பட்ட பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இறந்தவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பலரின் உடல்கள் கருகி அடையாளம் காண முடியாத அளவுக்கு இருந்தன. இதனால் சிரமங்கள் உள்ளன."– என்றார்.

# பா.ஜ.கவின் வாக்குகள் நாம் தமிழரை விட அதிகமாக இருந்தால் கட்சியை கலைப்பேன்

## சவால் விடுக்கின்றார் சீமான்

"பா.ஜ.க. தனித்து பெற்ற வாக்குகள் நாம் தமிழரை விட அதிகமாக இருந்தால் கட்சியை கலைத்து விடுகிறேன்."

– இவ்வாறு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலைக்கு, நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் சவால் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"முல்லை பெரியாற்றில் புதிய அணையை கேரள அரசு கட்டக்கூடாது. அணை பலவீனமாக இருக்கிறதெனில் இரு மாநில அரசுகளின் ஒப்புதலோடு, நிதி பங்கீட்டுடன் அணைக்குள் ஓர் அணை கட்டலாமே?. அதை விடுத்து ஏன் இடித்து கட்ட வேண்டும்? எனவே, முல்லை பெரியாற்றில் கேரள அரசு புதிய அணைக்கட்டுவதை ஏற்க முடியாது.

பிரதமர் மோடி ராமர், ராமர் என்று சொல்லிப் பார்த்தார். எடுபடவில்லை. எனவே, தற்போது தன்னையே ராமர் என்று சொல்லிவிட்டார். அவர் கோயில் கட்டவில்லை. தனக்காக வீடு கட்டிக் கொண்டார். ஒடிசாவில் உள்துறை அமைச்சர் அமித்ஷா பரப்புரையில் தமிழர் ஒருவர் முதல்வராக வருவது குறித்து சர்சைக்குரிய விதமாக பேசியிருக்கிறார். பஞ்சாப் மாநிலத்தை பஞ்சாபி தான் ஆள வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்திருக்கிறார்.

ஆனால், தமிழகத்தை தமிழர் தான் ஆள வேண்டும் என்று



சொன்னால் மட்டும் விமர்சிக்கின்றனர். இதையெல்லாம் ஏப்ரல் 19 இற்கு முன்பாக இவர்கள் பேசியிருக்க வேண்டும்.

என் மண் என் மக்கள், என பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை நடந்தாரே, இப்போது உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் பேச்சுக்கு அவர் என்ன சொல்லப் போகிறார்? ஒரு தமிழராக அவரது நிலைப்பாடு என்ன? தமிழகத்தில் 3 ஆவது பெரிய கட்சியாக பா.ஜ.க. உருவெடுக்கும் என அண்ணாமலை கூறியிருக்கிறார். முதலில் அவர் தனித்து நின்று போட்டியிட்டு காட்டட்டும். ஜுன் 4 ஆம் திகதிக்கு பிறகு கூட்டணியின்றி பா.ஜ.க. தனித்து பெற்ற வாக்குகள், நாம் தமிழர் கட்சியைத் தாண்டி இருந்தது என்றால் நான் கட்சியை கலைத்துவிட்டு சென்றுவிடுகிறேன். அதன்பின் பெரிய கட்சி யார் என்பது தெரிந்துவிடும்." – என்றார்.

# ஜனாதிபதி இப்ராகிம் ரைசியின் மரணம்: ஈரான் அரசு உத்தியோகப்பூர்வ அறிக்கை





ஈரான் ஜனாதிபதி பயணித்த உலங்கு வானூர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஈரான் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி கடந்த 19ஆம் திகதி அஜர்பைஜான் நாட்டில் அணை திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு நாடு திரும்பியபோது, அஜர்பைஜான் – ஈரான் எல்லை அருகே அவர் பயணித்த உலங்குவானூர்தி விபத்திற்குள்ளானது.

இந்த விபத்தில் பயணித்த 8 பேரும் உயிரிழந்தனர் என ஈரான் அரசு அதிகாரப்பூர்வமாக செய்தி வெளியிட்டது.

இந்த விபத்து தொடர்பான முதற்கட்ட விசாரணையில், ஈரானின் வடமேற்கில் உள்ள மலைப்பகுதிகளில் கடும் பனிமூட்டத்துடன் கூடிய மோசமான வானிலை நிலவியதால், ஈரான் ஜனாதிபதி இவ்விபத்தில் சிக்கினார் என தகவல் வெளியானது.

இந்த நிலையில், ஈரான் ஜனாதிபதியின் உலங்கு வானூர்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை எனவும் மலையின் மீது மோதிய உடனேயே தீப்பிடித்து எரிந்ததாகவும் மற்றும் உலங்கு வானூர்தி மீது துப்பாக்கி மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதற்கான எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அடுத்தகட்ட விசாரணையில் விபத்து தொடர்பான கூடுதல் விவரங்கள் தெரியவரும் என்றும் அந்த நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

# வியட்நாம் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 14 பேர் பலி

வியட்நாம் – மத்திய ஹனோய் பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் மூவர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

வியட்நாமின் தலைநகரில் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பிரதேசமான காவ் கியே மாவட்டத்தில் உள்ள கட்டடத்திலிருந்து புகை மற்றும் நச்சு வாயு வெளியேறிய நிலையில், இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, தீ விபத்தில் காயமடைந்த மூவரும் வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர் என குறிப்பிடப்படுகிறது.



இந்த கட்டடத்தின் முற்றம் மின்சார சைக்கிள்களை விற்பனை செய்வதற்கும் பழுதுபார்ப்பதற்கும் பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில், பெருமளவான மோட்டார் சைக்கிள்கள், மின்சார சைக்கிள்கள் மற்றும் மிதிவண்டிகள் தீயில் கருகியுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.














# நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுத்த சிறந்த தலைவரே ரணில்!

## வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ் சுட்டிக்காட்டு

**(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)**

“நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுத்து சவால்களைத் தனி நபராக எதிர்கொண்டு நாட்டை மாற்றியமைத்த சிறந்த தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்துக்காக யாழ். நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எட்டு மாடிகளைக் கொண்ட மருத்துவப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சிக் கட்டடத் தொகுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“யாழ். பல்கலைக்கழகத்துக்கான பாரிய மைல்கல் நிகழ்வாக இன்றைய நிகழ்வு அமைந்துள்ளது. நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த இந்த கட்டடத் தொகுதியை விரைவில் திறந்து, பயன்பாட்டுக்கு வழங்குமாறு கடந்த மார்ச் மாதம் ஜனாதிபதியிம் கோரிக்கை விடுத்தேன்.

கோரிக்கையை ஏற்று, மே மாதம் கட்டடம் திறக்கப்படும் என அவர் கூறினார். அதன் பின்னர் ஒரு தடவை கூட இது தொடர்பில் பேசவில்லை. எனினும், வழங்கிய வாக்குறுதிக்கு அமைய ஜனாதிபதி இந்தக் கட்டடத்தைத் திறந்து வைத்துள்ளார். இதுவே தலைமைத்துவத்துக்கான சிறந்த வெளிப்பாடு. சிறந்த தலைவர் ஒருவர் செயற்படக்கூடிய விதம் இதுவே.

பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுத்த தலைவர் எமது ஜனாதிபதி. அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரம் இன்றி நாடு இருளுக்குள் கிடந்தபோது, தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்று சவால்களை அவர் வெற்றிகொண்டார்.

பல சவால்களைத் தனி நபராக எதிர்கொண்டு, நாட்டை அவர் மாற்றியமைத்தார். இவ்வாறான ஜனாதிபதியின் பிரதிநிதியாக வடக்கில் ஆளுநராக சேவையாற்றுவதில் பெருமிதம் அடைகின்றேன்.” – என்றார்.







# ரணில் - சந்திரிகா இரகசிய சந்திப்பு

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கும் இடையில் விசேட பேச்சு இடம்பெற்றுள்ளது.

இந்தப் பேச்சு, இந்தோனேசியாவுக்கு ஜனாதிபதி ரணில் விஜயம் மேற்கொண்டிருந்தபோது அங்கு சந்திரிகாவை அவர் சந்தித்தபோதே இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், இருவருக்கும் இடையிலான சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று அரசியல் மட்டத்தில் பேசப்படுகின்றது.

எனினும், அங்கு பேசப்பட்ட விடயம் குறித்து தகவல்கள் இரகசியாகமாகப் பேணப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி ரணிலுடன் மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண, அநுர பிரியதர்ஷன யாப்பா உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் குழுவொன்றும் சென்றுள்ளது.

மேற்படி நால்வரும் பண்டாரநாயக்க ஆதரவாளர்கள் என்ற வகையில் அண்மைக்காலம் வரை முக்கிய நபர்களாக இடம் பிடித்திருந்த நிலையில் இவர்களுக்கு மேலதிகமாக ரணில் விக்கிரமசிங்கவுடன் நிமல் லான்சாவும் இந்தப் பயணத்தில் இணைந்துள்ளார் என்று தற்போது தெரியவந்துள்ளது.

மேலும், உலக நீர் தினத்தில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் இந்தோனேசியாவுக்குச் செல்வது தொடர்பில் ஆரம்பம் முதலே அரசியல் அவதானிகள் கவனம் செலுத்தியிருந்தனர் என்று ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சீரற்ற காலநிலையால் டெங்கு பரவும் அபாயம்

இலங்கையில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 24 ஆயிரத்து 227 டெங்கு நேயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று டெங்கு நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின்படி, கடந்த ஏப்ரல் மாதத்தில் 2 ஆயிரத்து 234 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர். இந்த மாதத்தின் இதுரையான காலப்பகுதியில் 1,954 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்த மாவட்டத்தில் 5 ஆயிரத்து 183 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



கொழும்பு மாவட்டத்துக்கு அடுத்தபடியாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 884 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று டெங்கு நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.




**1. உரலார் கேள்வி :-நல்லவர்களாய் இருக்கிறவர்களுக்குத் திடீரென மரணம் வந்துவிடுகிறது, கெட்டவர்கள் நீண்ட காலம் வாழ்கிறார்கள், கடவுளும் இப்போது கெட்டவர்களின் பக்கம் தானோ? கலிகாலம், கிலி காலம் என்றெல்லாம் புலம்புவதை விட்டுவிட்டு நான் ஒத்துக் கொள்கிற மாதிரி முடிந்தால் ஒரு பதில் சொல்லுங்கள் பார்க்கலாம்!**

**உலக்கையார் பதில் :-** 'சீரியசான' கேள்வியைக் கேட்டு விட்டு, 'சீரியசாய்ப்' பதில் சொல்ல வேண்டாம் என்கிறீர்கள்? அதனால் விளையாட்டாய் ஒரு பதில் சொல்கிறேன். முன்பொரு முறை ஒரு நண்பன் இதே கேள்வியை என்னிடம் கேட்டு விட்டு நான் பதில் தெரியாதென்றதும், அவனே ஒரு சுவாரசியமான பதிலைச் சொன்னான். அதனையே உங்களுக்குச் சொல்லி விடுகிறேன்.

பாவிகள் அதிகம் செல்வதால் நரகம் எப்பொழுதும் 'ஹவுஸ்புல்'லாகத்தான் இருக்குமாம். அதனால் நரகத்திற்கான 'டிக்கெட்' அரிதாக ஓரிருவருக்குத்தான் கிடைக்குமாம். உலகில் நல்லவர்கள் தொகை மிகக் குறைவாக இருப்பதால் சொர்க்கத்திற்கு செல்வோர் மிக அரிதாகவே இருப்பார்களாம். அதனால் சொர்க்கத்தில் எப்பாழுதும் 'சீற்றுகள் பிறீயாகத்தான்' இருக்குமாம். அதனால் தான் 'சீற் பிறீயாக' இருக்கும் சொர்க்கத்தில் நல்லவர்களுக்கு உடன் 'சீற்' கிடைத்து விடுகிறதாம். 'ஹவுஸ்புல்லாக' இருக்கும் நரகத்திற்குள் பாவிகளுக்குச் 'சீற்' கிடைக்கப் பிந்துகிறதாம்.

இது எப்படி இருக்கு?

**சல்லடையார் சலிப்பு :-**

**வாரிதியார், நல்லவர்களாய் இருந்தால் நாம் கெதியில் மண்டையைப் போட்டு விடுவோம் என்கிறாரோ?**

✦✦✦✦✦✦✦✦✦✦

**2. உரலார் கேள்வி :- வரவர நீங்களும் இந்தக்காலப் பொடியங்கள் போல 'வைச்சுச் செய்யிறது', 'சிறப்பு', 'ஆட்டையப்போடுதல்', 'சம்பவம் செய்தல்' போன்ற இதுவரை வழக்கத்தில் இல்லாத சொற்களை எல்லாம் போட்டும், ஆங்கில சொற்களை நிறையப் பாவித்தும் பதில் எழுதத் தொடங்கியிருக்கிறீர்கள். நீங்களே இப்படிச் செய்வது சரியாகுமா?**

**உலக்கையார் பதில் :-**

இதைச் சரியென்று சொல்ல மாட்டேன். தேவை கருதியே அப்படி எழுதுகிறேன். என்னைப் பொறுத்த வரை, நான் எழுதுகின்ற விடயங்களை இன்றைய இளையோரும் வாசிக்க வேண்டும். எனக்குத் தெரிந்த செந்தமிழில் பதில் எழுதினால் இன்றைய இளையவர்கள் இது 'பத்தாம்பசலி'த்தனமான விடயங்கள் என நினைத்து அவற்றைத் தாண்டிப் போய்விடுவார்கள். அதனால் தான் அவர்களுக்குப் பிடித்த பாஷையில், அவர்களுக்குப் பிடித்த பாணியில் எழுதிக் கொண்டிருக்கின்றேன்.

ஆங்கிலச் சொற்களை அதிகம் சேர்த்துக் கொள்வதும் அதற்காகத்தான். உண்மையைச் சொல்லப் போனால், என்னுடைய ஆங்கில அறிவு என்பது பூச்சியத்தை அண்மித்தது. ஆனாலும் நான் இடையிடையே ஆங்கிலச் சொற்களை எடுத்து விடுவது இளையோரை ஈர்ப்பதற்காகவேயாம்.

சொல்லுகிற சொற்களை விட பொருள் முக்கியமானது. பொருளைக் கொண்டுசேர்ப்பிக்க மொழியைக் காலத்திற்கேற்பப் பயன்படுத்துவதில் தவறில்லை என்றே கருதுகிறேன். என்னுடைய மொழியறிவைக் காட்டுவதற்காக எழுதுவதை விட இளையவர்களின் பொருள் அறிவை வளர்ப்பதற்காக எழுதுவதே சிறந்தது என்பதுவே எனது முடிவு.

இன்றைய இளையவர்களுக்கு மூத்தவர்களாகிய நாங்கள் நிறையச் சொல்ல வேண்டியிருக்கிறது. பழையகாலத்தில் வேடர்கள், தாம் பழக்கப்படுத்திய யானைகளை விட்டுக் காட்டு யானைகளை வரவழைத்துப் பிடிப்பார்களாம் . இதனை உமாபதி சிவாச்சாரியார் தன்னுடைய திருவருட்பயன் எனும் நூலில் பதிவு செய்திருக்கிறார்.

'பார்வை என மாக்களை முன் பற்றிப் பிடித்தற்காம் போர்வை எனக் காணார் புவி.' என்பது அவர் சொல்லி இருக்கும் குறள். இறைவன் பக்குவப்பட்ட மனிதர்களைத் தன் வயப்படுத்துவதற்காக மனித

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

வடிவேற்றுக் குருவாக வருவானாம், இதனைச் சொல்லவே மேற்படி உதாரணத்தை உமாபதியார் பயன்படுத்தியிருக்கிறார்.

இவையெல்லாவற்றுக்கும் மேலாக நம் திருவள்ளுவப் பெருமான் 'எவ்வது உறைவது உலகு உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு' என்றுவேறு, எனது முயற்சிக்கு வழிகாட்டியிருக்கிறார். செய்வது பிழைதான், நல்ல நோக்கத்திற்காகச் செய்யப்படுவதால் அதுவும் சரியாகிறது. 'பிளீஸ்' கொஞ்சம் பெறுத்துக் கொள்ளுங்களேன். இளையவர்களிடம் நான் நினைக்கும் செய்திகள் போய்ச் சேர்ந்ததும் உங்கள் மனம் குளிரச் செந்தமிழிலேயே பதில் எழுதத் தொடங்குகிறேன் . அதுவரை 'குட்பாய்'!

**சல்லடையார் சலிப்பு :-**

**இந்தக் குசும்பு தானே வேணாம் என் கிறது..!**

✦✦✦✦✦✦✦✦✦✦

**3. உரலார் கேள்வி :- கடும் கோடையில் விளாசித் தள்ளும் மழையைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**உலக்கையார் பதில் :-** மனிதர்கள் எந்தக் கவலையுமின்றி ஒழுக்கம் கெட்டு நடப்பதைப்பாரத்து, இயற்கையும் அப்படி நடக்கத் தொடங்கி விட்டது. ஒழுக்கத்தின் அவசியத்தை இனித்தான் உலக மக்கள் உணரப் போகிறார்கள்.

இக்காலநிலைக் குழப்பத்திற்கான காரணத்தை விஞ்ஞானிகளும் விளக்கி இருக்கிறார்கள். இந்த ஆண்டில் 'எல்நீனோ' எனும் காலநிலை மாற்றம் ஏற்படப்போகிறதாம். இந்த 'எல்நீனோ' மாற்றம் பற்றி 1923 ஆம் ஆண்டில் 'சேர். கில்பர்ட் தாமஸ் வாக்கர்' என்பவர் முதன் முதலாக விளக்கினாராம்.

'எல்நீனோ'– தெற்கத்திய அலைவு என்பது, கடல் வளிமண்டல சுழற்சியில் ஏற்படும் வெப்பம், காற்றின் மாறுதல்கள் மற்றும் அவற்றால் ஏற்படும் விளைவுகளால் உலக நாடுகளில் உள்ள சில பகுதிகளில் பருவநிலைகளில் பாதிப்புக்களை உண்டாக்குமாம்.

இந்த 'எல்நீனோ' உலகின் பல பகுதிகளிலும் ஏற்படும், வெள்ளம், வறட்சி போன்ற பல இடையூறுகளுடன் தொடர்புள்ளதாய்ச் சொல்லப்படுகிறது. இக்காலத்தில் கடல்பரப்பின் வெப்பநிலையானது, சராசரி வெப்பநிலையைவிட அதிகரிக்குமாம்.

மேலே சொன்ன 'எல்நீனோ'வின் விளைவுதான் கோடையில் நிகழ்ந்துள்ள மாரி என்கிறார்கள். சாராயம் குடித்தவன் தடுமாறுவது போல இயற்கையும் தடுமாறத் தொடங்கியிருக்கிறது. விஞ்ஞானிகள் மட்டுமன்றிப் பல நாடுகளில் வாழ்ந்த தீர்க்க தரிசிகளும் கூட இந்த ஆண்டில் இயற்கைப் பேரழிவு நடக்கப் போகிறது என்று எச்சரிக்கிறார்கள்.

என்ன நடக்கப் போகிறதோ தெரியவில்லை! எதற்கும் இந்த மாதம் வீட்டு 'பட்ஜெட்' போடுகிற பொழுது அரிசி, பருப்பு, சீனி முதலியவற்றைக் கொஞ்சம் கூடவே வாங்கி வைத்துக் கொள்ளுங்கள்.

**சல்லடையார் சலிப்பு :-**

**கூட வாங்கக் காசுக்கு எங்க போற தென்று வாரிதியார்தான் சொல்ல வேண்டும்.**

✦✦✦✦✦✦✦✦✦✦

**4. உரலார் கேள்வி :- ஹெலிக்கொப்டர் விபத்தில் ஈரான் ஜனா திபதி மறைந்திருப் பது பற்றி?**

**உலக்கையார் பதில் :-** முதலில் அவருக்கான அஞ்சலியைச் செலுத்துகிறேன். இப்பொழுதே இணைய வெளிகளில் அவரது மரணம் பற்றிப் பல ஊகங்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன.



அண்மையில் இஸ்ரேல் மீது நூற்றுக் கணக்கான ட்ரோன்களை ஏவி, துணிவாக இஸ்ரேலைத் தாக்க உத்தரவிட்டவர் இவர். அணு ஆயுதத்தைத் தயாரித்துவிட்டதாகச் சொல்லப்படும் ஈரானின் இருப்பு, இஸ்ரேலுக்கு மட்டுமன்றி அதனைச் செல்லப்பிள்ளையாக வளர்த்து வரும் அமெரிக்காவுக்கும் கூடத் தலையிடி தரத் தொடங்கியிருக்கிறது.

இந்நிலையில் திடீரென நிகழ்ந்திருக்கும் ஈரானிய ஜனாதிபதியின் விபத்து மரணம், நிச்சயம் பல ஊகங்களைக் கிளப்பத்தான் போகிறது. அப்படிக் கிளப்பப்படும் ஊகங்கள், உண்மையென நிரூபிக்கப்படுமானால், மூன்றாம் உலக யுத்தத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது என்றுதான் நினைக்க வேண்டியிருக்கும்.

**சல்லடையார் சலிப்பு :-**

**ஊகங்கள் உண்மையாகாமல் இருக்கக் கடவது !!!**

✦✦✦✦✦✦✦✦✦✦

**5. உரலார் கேள்வி :-**

**கொழும்பில் கம்பன் விழா நடக்கப் போகிறதாமே?**

**உலக்கையார் பதில் :-** 2020ம் ஆண்டோடு, 'கொரானா' காரணமாக நிறுத்தப்பட்ட விழா முயற்சியை இறைவனை வேண்டி இவ்வாண்டு தொடங்கியிருக்கிறோம். ஜுன் 14 ஆம் திகதி முதல் 17 ஆம் திகதி வரை இவ்விழா நடைபெறவுள்ளது. விழாச் சிறக்க உங்களது ஆதரவும், பிரார்த்தனையும் துணை செய்ய வேண்டும்.

**சல்லடையார் சலிப்பு .-**

**சந்தோஷமான விசயம், பலரது கனவும் நனவாகப்போகிறது**

✦✦✦✦✦✦✦✦✦✦

# மோ. சைக்கிள் விபத்தில் சீதுவையில் ஒருவர் பலி

(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

சீதுவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நீர்கொழும்பு – கொழும்பு வீதியில் லியனகேமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என சீதுவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தானை பிரதேசத்தைச் சேர்ந்த 65 வயது நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

நீர்கொழும்பிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று வீதியில் பயணித்த பாதசாரி ஒருவர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த பாதசாரி சீதுவ விஜய குமாரதுங்க வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்

உயிரிழந்தவரது சடலம் விஜய குமாரதுங்க வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்றவர் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சீதுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதி ரணில் ஒரு ஜனநாயகப் படுகொலையாளி தேர்தல் பிரச்சாரம்தான் வடக்கு விஜயத்தின் நோக்கம்

## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் காட்டம்

(விஜயரத்தினம் சரவணன்)

ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடாத்தி ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போகின்றார் எனத் தெரிவிக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதிகாரப் பரவலாக்க நோக்குடன் உருவாக்கப்பட்ட மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தாது ஜனநாயகத்தைப் படுகொலைசெய்த ஒரு ஜனநாயகப் படுகொலையாளி என முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஜனாதிபதித் தேர்தலே இவ்வருடத்திற்குள் முதலில் இடம்பெறுமென அமைச்சரவையில் தெரிவித்துவிட்டு, தமிழ்மக்களின் வாக்குகளை அறுவடைசெய்வதற்கு, தேர்தல் பிரச்சார நோக்குடனேயே ரணில் விக்கிரமசிங்க வடக்கிற்கு விஜயம்மேற்கொண்டுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அமைச்சரவையில் தேர்தல் தொடர்பில் வெளியிட்ட கருத்து மற்றும் அவரின் வடக்கிற்கான விஜயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே ரவிகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரமைப்பிற்கு அமைய, ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடாத்தி ஜனநாயகத்தை பாதுகாக்கவுள்ளார் எனக் கடந்த அமைச்சரவைக்கூட்டத்தில் பேசியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து மூன்று நாள்கள் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டு, வைத்தியசாலைக் கட்டடங்கள் சிலவற்றைத் திறந்து வைப்பதுடன், மக்களுக்கு காணி உரிமைப் பத்திரங்களை வழங்கவுள்ளார் எனவும் அறிய முடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போகிறார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



குறிப்பிடுவது வேடிக்கையாக இருக்கின்றது.

அரசமைப்பில் ஜனாதிபதித் தேர்தலைப்பற்றியும், பொதுத்தேர்தலைப் பற்றியும் மாத்திரமா குறிப்பிடப்பட்டிருக்கின்றது?

அதிகாரப் பரவலாக்கல் நோக்குடன் உருவாக்கப்பட்ட மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் பற்றி இலங்கையின் அரசமைப்பில் குறிப்பிடப்படவில்லையா?

இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவாரா?

அவர் முதலில் இலங்கையின் அரசமைப்பைப் பற்றி முழுமையாக அறிந்துகொள்ளவேண்டும். அதன் பிற்பாடு ஜனநாயகத்தைப் பாதுகாப்பது எவ்வாறு என்பதைப. பற்றிச் சித்திக்கலாம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசமைப்பின் பிரகாரம் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை பாதுகாப்பதானால் முதலில் மாகாணசபைத் தேர்தல்களையும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களையும் எப்போதோ நடாத்தியிருக்க வேண்டும்.

மாகாண சபைகளதும், உள்ளூராட்சி மன்றங்களதும் ஆட்சிக்காலங்கள் முடிவுற்று பல வருடங்கள் கடந்திருக்கின்றன. எனினும் இதுவரை இந்தத் தேர்தல்களை நாடாத்துவது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

மிக முக்கியமாக இந்த மாகாணசபைகள் மற்றும், உள்ளூராட்சி மன்றங்கள் என்பன அதிகாரப் பரவலாக்கத்தின் குறியீடுகளாகப் பார்க்கப்படுகின்றன.

குறிப்பாக மாகாண சபைகள் மற்றும், உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக முழுமையாக அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன என்று கூறிவிட முடியாது.

எனினும் இந்த மணகாணசபை மற்றும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை நடத்தாததன் மூலம் அற்பசொற்ப அதிகாரங்களைக் கூட தமிழ் மக்களுக்குப் பகிரத் தயாராக இல்லை என்ற விடயத்தை ஆட்சியாளர்கள் கூறுவதாகவே பார்க்க முடிகின்றது.

அத்தோடு இந்தத் தேர்தல்கள் நடத்தப்படாதமை மூலம், நாட்டு மக்கள் தமது ஜனநாயகக் கடமைகளையாற்றுவதற்கும், ஜனநாயகத் தெரிவை மேற்கொள்வதற்கும் ஆட்சியாளர்கள் இடமளிக்கவில்லை.

இது ஒரு ஜனநாயகப் படுகொலையாகும். இத்தகையதொரு ஜனநாயகப் படுகொலையாளியாக இருக்கின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது ஜனாதிபதித் தேர்தலை நடத்தி ஜனநாயகத்தைப் பாதுகாக்கப் போகிறார் எனத் தெரிவிப்பது மிகவும் வேடிக்கையாக இருக்கின்றது.

இவ்வாறு தன்னை ஒரு ஜனநாயகப் காப்பாளனாக அறிமுகப்படுத்திக் கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளை அறுவடைசெய்வதற்காகவே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடாத்தப்படும் என அறிவித்துவிட்டு, தேர்தல் பிரச்சார நோக்கிலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு வடக்கிற்குப் புறப்பட்டுள்ளார் – என்றார்.



# அனர்த்த நிலைமைகள் தொடர்பில் நடவடிக்கை பாதுகாப்பு அமைச்சில் நேற்றுக் கலந்துரையாடல்

**சீரற்ற காலநிலையால் ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் குறித்து விசேட கலந்துரையாடல்**

நாட்டில் நிலவும் கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக ஏற்பட்டுள்ள அனர்த்த நிலைமைகள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அவசர செயற்பாட்டு நிலையத்தில் நேற்று விசேட கலந்துரையாடல்

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தலைமையில் இடம்பெற்றது.

மரங்கள் முறிந்து விழும் அபாயம் குறித்து இந்த கலந்துரையாடலின் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இதேவேளை, கடந்த 19ஆம் திகதி முதல் நேற்று வரை மரங்கள் முறிந்து விழுந்ததில் 6பேர் உயிரிழந்துள்ளமையுடப் 11பேர் காயமடைந்துள்ளனர் எனவும் 18 மாவட்டங்களில் 9,616 குடும்பங்களைச் சேர்ந்த 34 ஆயிரத்து 880 பேர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தருணத்தில் தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், அரச திணைக்களங்கள், மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், நிவாரண சேவை நிலைய உத்தியோகத்தர்கள் மற்றும் குறிப்பாக பாதுகாப்புப் படை, பொலிஸ் மற்றும் சிவில் பாதுகாப்புப் படையினர், பாதிக்கப்பட்ட மக்களுக்காக முன்னெடுத்து வரும் துரித நடவடிக்கைகளை இராஜாங்க அமைச்சர் இதன்போது பாராட்டினார்.

அண்மைக்காலமாக மரங்கள் விழும் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும், அதனை தடுக்கும் நடவடிக்கையாக தேசிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

'சுரகிமு' நிகழ்ச்சியின் மூலம் பாடசாலை மற்றும் பாடசாலை வளாகத்தில் உள்ள மாணவர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், வீதிகளில் மரங்கள் அதிகமாக விழுவதால் அவற்றைக் கட்டுப்படுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண அதிகார சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆதரவையும் தாம் எதிர்பார்க்கின்றார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், வீதியோரம் மரங்கள் நடுவது தொடர்பில் முறையான ஆய்வுகளை மேற்கொண்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்திய பின்னர் விசேட குழுவொன்றின் வழிகாட்டலின் கீழ் தேசியக் கொள்கையொன்றை உருவாக்குவதற்கு எதிர்பார்த்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

மேலும், பாதுகாப்பற்ற மற்றும் அங்கீகரிக்கப்படாத கட்டட நிர்மாணங்களால் தாழ்நிலப் பிரதேசங்களில் ஏற்படும் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

நாட்டில் மழை மேலும் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ள நிலையில் எதிர்வரும் நாள்களில் ஏற்படக்கூடிய அவசர நிலைமைகளுக்கு முகங்கொடுக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இராஜாங்க அமைச்சர் தென்னகோன் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் சீரற்ற காலநிலை தொடர்பான அவசரநிலைகளை எதிர்கொள்ள பொதுமக்கள் எப்போதும் விழிப்புடன் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் உதய ஹேரத், தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் ஆசிரி கருணாவர்தன, வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அதுல கருணாநாயக்க, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் மேலதிக செயலாளர் கமகே தர்மதிலக உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



# சிறுவர்களின் இணையத்தள பாவனை அசுர வேகத்தில் அதிகரித்துள்ளதாம்!

உலகளாவிய ரீதியில் சிறுவர்களின் இணையத்தள பாவனை அசுர வேகத்தில் அதிகரித்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதன்படி, ஒவ்வொரு அரை வினாடிக்கு ஒரு சிறுவர் இணையத்தளத்தை அணுகுகின்றார் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு அதிகரித்த இணையத்தள அணுகளானது சிறுவர்களை கடுமையான அபாயங்களுக்கு ஆளாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் உலகளாவிய ரீதியில் பல்வேறு அரசாங்கங்கள் சில நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியுள்ள போதிலும், சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறைந்ததாகத் தெரியவில்லை.

2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்களில் 79 வீதமானவர்கள் இணையத்தளம் ஊடாக உறவுகளை பேணிவருகின்றனர் எனத் தரவுகள் காட்டுகின்றன.

இதனிடையே, கடந்த வருடத்தில் மாத்திரம் உலகளாவிய ரீதியில் 36.2 மில்லியன் சிறுவர்கள் பாலியல் சுரண்டலுக்கு உள்ளாகியுள்ளனரல் எனவும், 28,886 சிறுவர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் எனவும் அமெரிக்காவின் காணாமல் போன மற்றும் சுரண்டலுக்கு உள்ளான குழந்தைகளுக்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 2021 மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் இணையவழி ஊடாக சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துவதற்கு தூண்டியமை நூற்றுக்கு 300 வீதம் அதிகரித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், கடந்த வருடத்தில் மாத்திரம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் 5 மில்லியன் முறைப்பாடுகள் கிடைத்துள்ள நிலையில், 426,000 சிறுவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர் எனவும் காணாமல் போன மற்றும் சுரண்டலுக்கு உள்ளான குழந்தைகளுக்கான தேசிய மையம் சுட்டிக்காட்டியுள்ளது

# நாட்டின் சில பகுதிகளுக்கு செம்மஞ்சள் நிற எச்சரிக்கை

தென்மேல் பருவப் பெயர்ச்சியினால் நாட்டில் தொடர்ந்தும் மழை மற்றும் அதிக காற்றுடன் கூடிய வானிலை நீடிக்குமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், தென் மற்றும் வட மாகாணங்களில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

சப்ரகமுவ மாகாணத்திலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களின் சில இடங்களிலும் 150 மில்லி மீற்றர் மழை பெய்யும் சாத்தியமுள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ மாகாணங்களிலும் மன்னார், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் 100 மில்லி மீற்றருக்கும் அதிக மழை வீழ்ச்சி பதிவாகுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், நாட்டின் ஏனைய பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியமுள்ளதாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, 10 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, கண்டி, கேகாலை, காலி, குருநாகல், நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களின் சில பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு அபாய எச்சரிக்கையே தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், கொழும்பு மாவட்டத்தின் சீதாவாக்கை பிரதேச செயலக பிரிவிற்கும் களுத்துறை மாவட்டத்தின் மத்துகம மற்றும் புலத்சிங்கள பிரதேச செயலக பிரிவுகளுக்கும் செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் அம்பகமுவ, இரத்தினபுரி மாவட்டத்தின் எலப்பாத்த, இரத்தினபுரி, குருவிட்ட, கிரியெல்ல, எஹெலியகொட, அயகம, கலவான, இம்புல்பே மற்றும் பலாங்கொடை ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்கும் செம்மஞ்சள் நிற மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள பிரதேசத்தில் வசிக்கும் மக்கள், மண்மேடு சரிதல், மரங்கள் முறிந்து வீழ்தல், கற்பாறைகள் சரிதல், நிலம் தாழிறங்குதல் உள்ளிட்ட அனர்த்தங்கள் தொடர்பில் அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, களனி கங்கை, களு கங்கை, கிங் கங்கை மற்றும் அத்தனகலு ஓயா ஆகியவற்றின் நீர் மட்டம் அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது.

இதனால், மேற்படி கங்கைகளை அண்மித்த தாழ்நிலப் பகுதிகளில் வசிக்கும் மக்களை அவதானமாகச் செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.




# யானையைச் சுட்டுக் கொன்றவர் கைது அநுராதபுரம் பொலிஸ் பிரிவில் சம்பவம்

காட்டுயானைக் கூட்டம் ஒன்று பயிர்களை நாசம் செய்து கொண்டிருந்த போது அதன் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒரு யானை உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் ஹிடோகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹல்மில்ல குளப்பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக திரப்பனய வனவிலங்கு அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஹல்மில்லக்குளம், தருவில பிரதேசத்தில் வசிக்கும் நபர் ஒருவர் இவ் விடயத்தை ஒட்டிக் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயிர்களை நாசம் செய்து கொண்டிருந்த போது, கூட்டத்தை விரட்ட முற்பட்ட வேளை, யானையொன்று சந்தேக நபரை துரத்தியுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது, சந்தேகநபர் கையில் வைத்திருந்த உரிமம் பெற்ற துப்பாக்கியால் காட்டு யானையைச் சுட்டுக் கொன்றுள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் 7அடி, 3 அங்குலம் உயரம் கொண்ட 20 வயதுடைய ஆண் யானை ஒன்றே உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

திரப்பனய வனவிலங்கு அலுவலகத்திற்கு கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம், அலுவலகத்தின் தள உதவியாளர் உள்ளிட்ட குழுவினர் எச்.என்.பி.இ. ஹேரத் சம்பவம் நடந்த இடத்தை ஆய்விற்குட்படுத்தியுள்ளார்.

# உக்ரைன் போருக்கு இராணுவத்தினரை அனுப்பிய மேஜரும் மனைவியும் கைது!

ரஷ்ய – உக்ரைன் போருக்காக இலங்கையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ உறுப்பினர்களை அனுப்பி ஆள்கடத்தலில் ஈடுபட்டமை தொடர்பில் ஓய்வுபெற்ற மேஜர் ஒருவரும் அவரது மனைவியும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த நபர் வத்தளையிலும் அவரது மனைவி பொரளையிலும் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் இருவரும் நீர்கொழும்பு நீதி ல்வான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், கணவன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மனைவி பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இதுவரை 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என குற்றப்புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# லஞ்சம் பெற முயன்றராம் பாடசாலை அதிபர் கைது


எஹலியகொட பகுதியில் பாடசாலை அதிபர் ஒருவர் 30 ஆயிரம் ரூபா லஞ்சம் பெற முயற்சித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பாடசாலையில் மதிய நேர உணவை வழங்குவதற்காக பதிவு செய்திருந்த நபரொருவரிடம் இருந்தே அதிபர் கையூட்டலைப் பெற முயற்சித்துள்ளார்.

மதிய நேர உணவு வழங்கும் செயற்பாட்டை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டுமாயின் தமக்குப் பணம் வழங்குமாறு சந்தேகநபரான பாடசாலை அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

, சந்தேகநபர் லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டமையை அடுத்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இதன்படி, அவரை எதிர்வரும் 03 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

# கொழும்பு நகரில் பல்வேறு வெசாக் நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றினார்!

நாடு முழுவதும் வெசாக் பண்டிகையை கொண்டாடும் வேளையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் நடைபெற்ற பல வெசாக் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார்.

வெசாக் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு ஹுனுப்பிட்டி கங்காராம விகாரையின் ஏற்பாட்டில் 'புத்த ரஷ்மி' வெசாக் வலயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கங்காராம விகாரைக்கு சென்ற ஜனாதிபதி, அங்கு பூஜை வழிபாட்டில் ஈடுபட்டார்.

கங்காராம விகாரையின் விகாராதிகாரி வண, கலாநிதி கிரிந்தே அஸ்ஸஜி தேரர், அங்கு சமய வழிபாடுகளை மேற்கொண்டு ஜனாதிபதிக்கு ஆசீர்வாதங்களை வழங்கினார்.

ஜனாதிபதி மின் விளக்குகளை ஒளிரவிட்டு 'புத்த ரஷ்மி வெசாக் வலயத்தை' திறந்து வைத்தார்.

வெளிநாட்டுத் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் உட்பட உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் பெரும் எண்ணிக்கையான அதிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டமையுடன் ஜனாதிபதியுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

கொழும்பு கங்காராம விகாரை, ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் சிங்கப்பூரின் மகா கருணா பௌத்த சங்கம் இணைந்து புத்த ரஷ்மி தேசிய வெசாக் விழாவை முன்னிட்டு காலி முகத்திடல் ஷங்கிரிலா பசுமை மைதானம் மற்றும் ஜனாதிபதி அலுவலக வளாகத்தில் மே 23, 24, 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் வெசாக் மின்விளக்கு அலங்காரங்கள், வெசாக் தோரணங்கள், பக்தி கீத நிகழ்ச்சி, வெசாக் அன்னதானம், நாட்டுப்புற பாடல்கள், விளக்கு அலங்காரங்கள் உட்பட பல்வேறு கலாசார நிகழ்வுகள் ஏற்பாடு செய்து முன்னெடுத்து வருகின்றன.

வெசாக் நிகழ்ச்சியின் ஆரம்பத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்கவினால் மின்விளக்குகள் ஒளிரவிடப்பட்ட பின்னர் வண்ணமயமான பக்திப் பாடல் நிகழ்ச்சி ஜனாதிபதி அலுவலகப் படிக்கட்டில் ஆரம்பமானது.

இதேவேளை, ஷங்கிரிலா பசுமை மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்ட வெசாக் அன்னதானம் ஜனாதிபதி ரணில் விக்

தொடர்ச்சி▼










# கொழும்பு நகரில் பல்வேறு வெசாக் நிகழ்ச்சிகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்குபற்றினார்!

தொடர்ச்சி▲

கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக் கப்பட்டது.

மேலும், பேலியகொட சமூக அபிவி ருத்தி அறக்கட்டளை, பேலியகொட நகர சபை மற்றும் வர்த்தக சமூகம் இணைந்து முதன்முறையாக ஏற்பாடு செய்திருந்த வெசாக் வலயத்தை நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திறந்து வைத்தார்.

இராஜாங்க அமைச்சர்களான பிர சன்ன ரணவீர, சிசிர ஜயக்கொடி மற்றும் உள்ளிட்ட பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, வெசாக் பண்டிகையை முன்னிட்டு மருதானை – சுதுவெல்ல ஐக்கிய பௌத்த சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வெசாக் வலயமும் கண்க வர் வெசாக் தோரணமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நேற்று முன்தினம் பிற்பகல் திறந்து வைக்கப் பட்டது.

ஸ்ரீ தர்மாலோக தயா மகா விகா ரையின் விகாராதிபதி வண, யடிஹேன சத்தாலோக தேரரின் அனுசாசனையின் பிரகாரம் முன்னாள் மாநகர சபை உறுப்பினர் கித்சிறி ராஜபக்ஷவின் கருத்தின்படி ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வெசாக் நிகழ்வு, பல விசேட அம்சங்களைக் கொண்டிருப்பதோடு, மணிக்கார குலுபகதிஸ்ஸ தேசிய கதையை தாங்கிய வெசாக் தோரணம் மே 27 ஆம் திகதி வரை மருதானை சந்தியில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இந்த சந்தர்ப்பங்களில், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்புப்படை பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விகும் லியனகே மற்றும் அரசியல் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பலர் ஜனாதிபதியுடன் இணைந்துகொண் டனர்.







# இன்றைய ராசி பலன்கள் - 25.05.2024




இன்று அதிர்ஷ்டம் காணப்படும் நாள். திருப்திகரமான பலன்கள் கிடைக்கும் சாதகமான நாள். உங்கள் பெற்றோரின் ஆதரவு கிடைக்கும்.அது உங்களுக்கு மகிழ்ச்சிகரமாக இருக்கும்.

பணியில் உங்கள் நேர்மை மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். சரியான நேரத்தில் பணிகளை முடிப்பது சக பணியாளர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்கள் பணியில் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இதனால் உறவில் நம்பிக்கை ஏற்படும்.நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.




இன்று எதிர்பாராத வரவுகளும் வெற்றியும் கிடைக்கும் நாள். புத்தி சாலித்தனத்தை பயன் படுத்துவதன் மூலம் அதிகம் சாதிக்கலாம்.

பணியில் உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறித்த நேரத்திற்கு முன்பே பணிகளை முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது.

நீங்கள் உங்கள் துணையிடம் சந்தோஷமான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.இன்று நிதிநிலை சீராக இருக்கும். காப்பீடு அல்லது பூர்வீக சொத்து வகையில் பண வரவு கண்டு மகிழ்வீர்கள்.




இன்று கவனமாகக் கையாள வேண்டிய கடினமான சூழ்நிலைகள் காணப்படும். இசை கேட்பது மற்றும் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது சில போராட்டங்களை சந்திப்பீர்கள். உங்கள் சக பணியாளர்கள் மூலம் சில பிரச்சினைகளை நீங்கள் சந்திப்பீர்கள். இதனால் அவர்களுடன் நல்லுறவு காணப்படாது.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள்.இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும்.

இன்று நிதிநிலைமை அவ்வளவு திருப்திகரமாக காணப்படாது. தேவையற்ற செலவுகள் ஏற்படும்.




இன்று திருப்திகரமான பலன்கள் கிடைக்காது. உங்கள் இலக்குகளை திட்டமிட்டு திறமையாக நடத்த வேண்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிகள் கடோயாக யாருக்கும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாத நிலை இருக்கும். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும்.

மன நிலை மாற்றத்தால் பாதிப்பு ஏற்படும். இதனால் உங்கள் துணையுடன் நல்லுறவு காண இயலாது. உறவில் நல்லிணக்கம் காண அமைதியான போக்கை மேற்கொள்ள வேண்டும்.

கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணமாக இன்று பண இழப்பு ஏற்படும். பணத்தை கையாளும்போது கவனம் தேவை.

இன்று சிறிது பதட்டம் காணப்படும். இதனால் கால் வலி ஏற்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




இன்று உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் சாதகமான நாள். கடின உழைப்பு மற்றும் இடைவிடாத முயற்சி மூலம் லாபகரமான பலன்கள் கிடைக்கும். இது உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

நீங்கள் இன்று கடினமான பணிகளையும் எளிதாக மேற்கொள்வீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள். இதனால் உறவில் நல்ல புரிந்துணர்வு ஏற்படும். இருவரிடமும் மகிழ்ச்சி காணப்படும்.

இன்று பணம் சேர்ப்பதற்கானஅதிர்ஷ்ட நிலை உள்ளது. இதனால் உங்கள் சேமிப்பு உயரும்.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். புத்திசாலித்தனத்தை பயன் படுத்தி உங்கள் முயற்சிகளில் வெற்றி காணலாம். மொத்தத்தில் இன்று மகிழ்ச்சியான நாள்.

பணி தொடர்பான பயணம் காணப்படு கின்றது. குறித்தநேரத்தில் பணிகளை முடிப்பதன் மூலம் உங்கள் திறமை வெளிப்படும்.

உங்களின் இனிமையான வார்த்தைகள் உங்கள் துணையை மகிழ்விக்கும். பயணம் காணப்படுகின்றது. இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

தொலை தூரத்திலிருந்து உங்களுக்கு வரும் பண வரவு வரப்பிரசாதமாக அமையும். எதிர்கால பாதுகாப்பிற்காக உபரிப் பணத்தை சேமிப்பீர்கள்.நம்பிக்கையான மனநிலை காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். சாதக மான பலன்கள் கிடைக்க கடினமான சூழ்நிலைகளை கவனமாக கையாள வேண்டும். இசை கேட்டல் மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் உங்கள் பணிகளை கவனமாக மேற்கொள்ள வேண்டும். உங்கள் பணிகளை மீண்டும் சரிபார்த்து செய்ய வேண்டிய நிலை ஏற்படும். தகவல் தொடர்பில் காணப்படும் பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடனான உறவில் பாதிப்பு ஏற்படும். உறவில் நல்லிணக்கம் காண இத்தகைய உணர்வை தவிர்க்க வேண்டும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக் காது. நீங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். முடிவுகளை விரைந்து எடுப்பீர்கள். இதனால் பிரச்சினை ஏற்படுத்தும் சூழ்நிலை காணப்படும். உங்கள உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவதன் மூலம் சிறந்த பலனைக் காணலாம்.

நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு சற்று கவலை ஏற்படுத்தும். சக பணியாளர்களிடமிருந்து சில தொல்லைகளை எதிர் கொள்ள நேரும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். நல்ல புரிந்துணர் விற்கு அனுசரணையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.தேவையற்ற செலவுகள் காரணமாக பணம் கரையும். சேமிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

# இன்றைய ராசி பலன்கள் - 25.05.2024

## தனுசு

உங்கள் வளர்ச்சிக்கு உதவும் முயற்சிகளை எடுக்க இன்றைய நாள் சாதகமாக உள்ளது. உங்கள் இலக்குகள் நிறைவேறும். திருப்தியும் நல்ல உணர்வும் உங்களிடம் இன்று காணப்படும்.

புதிய வேலை வாய்ப்புகள் உங்களுக்கு திருப்தி அளிக்கும். சாதித்தது போன்ற உணர்வு உங்களிடம் காணப்படும். எனவே நீங்கள் சிறப்பாக உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதற்கு உகந்த நாள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வும் மகிழ்ச்சி யும் வளரும். நிதி நிலைமை மகிழ்சிகரமாக இருக்கும். ஊக்கத் தொகை வகையில் பண வரவு ஏற்பட்டு பணம் சேர்க்க இயலும்.

நல்ல சுறுசுறுப்பு மற்றும் மனதிடம் காரணமாக இன்று உங்களிடம் ஆற்றல் நிரம்பி இருக்கும்.

## மகரம்

இன்று குழப்பங்களும் வருத்தமான மன நிலையும் காணப்படும். இன்றைய நாளை சமாளிக்க நீங்கள் அமைதியுடனும் கட்டுப்பாட்டுடனும் இருக்க வேண்டும்.

பணியிடத்தில் பணிகள் இறுக்கமாக காணப்படுவதால் நீங்கள் மும்மரமாக பணியில் ஈடுபட்டிருப்பீர்கள். சக பணியாளர்களின் எதிர்ப்பை சந்திப்பீர்கள். இது உங்களுக்கு கவலை அளிக்கும். சிறப்பாக பணியாற்ற பணிகளை திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் பொறுமையின்றி நடந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையே சூடான விவாதங்கள் ஏற்படும். இதனை தவிர்க்க நீங்கள் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளவேண்டும்.

## கும்பம்

இன்று சீரான பலன்கள் கிடைக்காது. சவால்களை சந்திக்க வேண்டிய சூழ்நிலை காணப்படும். நீங்கள் பொறுமையுடனும் திறமையுடனும் இதனைக் கையாள வேண்டும். தான தருமங்கள் போன்ற தொண்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அமைதி பெறலாம்.

சக பணியாளர்களுடன் சில அசௌகரியங்களை உணர்வீர்கள். இம்மாதிரியான அற்ப விஷயங்களை தவிர்த்து உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது இன்று அவசியம்.

இன்று உங்கள் துணையுடன் பேசாமல் அமைதியாக இருப்பது நல்லது.இன்று கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் ஏற்படும் அதிகப்படி செலவுகளை சமாளிக்க கடன் வாங்க நேரலாம்.

## மீனம்

இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்காது. பொறுமையுடன் இருந்தால் பல நன்மைகளைக் காணலாம். வெறுமை இருப்பது போன்ற உணர்வு காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் இந்த சூழ்நிலையை சமாளித்து அமைதி பெறலாம்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும். இன்று நீங்கள் திட்டமிட்டு பணியாற்றுவது மிகவும் அவசியம் . உங்கள் துணையுடன் சகஜமாக இருக்க வேண்டும். இதனால் உறவில் நல்லிணக்கத்தையும் மகிழ்ச்சியையும் தக்க வைக்க முடியும்.

நிதி விஷயங்களில் விரும்பும் பலன்கள் கிடைக்காது. உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள். எனவே திட்டமிட்டு பணத்தை கையாள வேண்டும்.



